4/2/25

**AECTN11**

Reg. No.

# I Semester B.A./B.Sc./B.C.A./B.Sc.(FAD)/B.P.A./B.V.A./B.S.W. Degree Examination, January/February - 2025

## TAMIL LANGUAGE

### (SEP Scheme 2023-24 and Onwards Freshers only)

### (Paper : I) (Part:1)

St. Francis College LIBRARY Koramangala Bengaluru

**Time : 3 Hours** **Maximum Marks : 80**

## SECTION - A

**I.** எவையேனும் மூன்றிற்கு விரிவான விடைதருக. **(3×8=24)**

1. நட்பு குறித்து 'சோழநல்லுருத்திரன்' கூறுவனவற்றை எழுதுக.

2. கோவலர் அடைந்தத் துன்பத்தினை வெடுநல்வாடை வழி நின்று விளக்குக.

3. கல்வி கற்றோர் அவையறிந்து பேசுவர் என்பதைப் பழமொழி பாடலின் வழி நிறுவுக.

4. பாசிராந்தையார் கோப்பெருஞ்சோழனிடம் அன்னசேவலைத் தூது அனுப்பியது குறித்து விளக்குக.

5. பாசறையில் இருந்த அரசனின் நிலையை நெடுநல்வாடை வழிப் புலப்படுத்துக.

**II.** எவையேனும் நான்கிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. **(4×5=20)**

6. "செஞ்ஞாயிற்றுத் தெறல் அல்லது பித்து தேரல் அறியார் நின் நிழல் வாழ்வோரே"

7. "இருகோல் குற்நிலை வழுக்காது குடக்கு ஏர்பு ஒருதிறம் சாரா அரை நாள் அமயத்து"

8. "பொருது ஒழி, நாகம் ஒழி எயிறு அருகுஎறிந்து சீரும் செம்மையும் ஒப்ப, வல்லோன்"

9. "வேயின் திரண்ட தோள், வேற்கண்ணாய் வின் இயங்கும்; ஞாயிற்றைக் கைம் மறைப்பார் இல்"

10. "ஞாயிற்று அன்ன ஆய் மணி மிடைந்த மதி உறழ் ஆரம் மார்பில் புரள"

11. "கை ஆர உண்டமையால், காய்வார் பொருட்டாக பொய்யாகத் தம்மைப் பொருள் அல்ல கூறுபவேல்"

[P.T.O

## SECTION - B

III. எவையேனும் நான்கிற்கு விடை தருக. (4×4=16)

12. சொல்லிசை அளபெடையைச் சான்றுடன் விளக்குக.

13. சுட்டெழுத்துக்களை விளக்கி அவற்றின் வகைகளை சான்றுடன் விளக்குக.

14. சார்பெழுத்துகளின் வகைகளைக் குறிப்பிடுக.

15. மொழி இறுதி எழுத்துகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

16. மெய்யெழுத்துகளின் வகைகளைக் குறிப்பிடுக.

17. குற்றியலிகரம் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

## SECTION - C

IV. கானல் நீர் கனவுகள்-என்னும் சிறுகதை தொகுப்பிலிருந்து (2×10=20)

பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு திறனாய்வு வடிவில் விடை தருக.

18. "மேன் மக்கள்" என்னும் சிறுகதையின் தலைப்பு பொருத்தத்தை விளக்குக.

19. "கானல் நீர் கனவுகள்" என்னும் சிறுகதையில் விஜயாவுக்கு நடக்கும் அவலங்களைக் குறித்து எழுதுக.

20. 'விழல்' என்ற சிறுகதையின் கருவை விளக்கி வரைக.

21. 'கைமாத்து' என்ற சிறுகதை கூறும் கடன் வாங்கும் மற்றும் கொடுக்கிறவர்களின் மனநிலையை விளக்குக.